# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,</u>

# <u>ARNI, TIRUVANNAMALAI DISTRICT.</u>

## <u>MCOP.NO.32/2019</u>

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **R.W.2 ( On the side of R2)** |
| **Name** | **:** | **திரு. ஆர். சிவக்குமார்** |
| **Father's Name** | **:** | **திரு. ராமமூர்த்தி** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.02.2025.**

<u>**முதல் விசாரணை -**</u>

**நான் தற்போது ஆரணி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரப்பெற்றது. ஆரணி, கொசப்பாளையம், பாரதியார் தெரு, 18 எ என்ற விலாசத்தில் வசித்து வரும் சேகர் குமாரர் விஜய் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை, மேலும் மேற்சொன்ன நபருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதை சாரதி போர்டெல்லில் ஆய்வு செய்ததில் மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. விஜய் என்பவரின் ஓட்டுநர் உரிமத்தை சரிபார்த்தற்கான கடிதம் <u>எ.ம.சா.ஆ.4</u>-ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய ஆளறி அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்டது) <u>எ.ம.சா.ஆ.5</u>-ஆக**

குறியீடுச் செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வட்டார போக்குவரத்து துறையில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதை கணினி மயமாக்கப்பட்ட ஆண்டு 2017 முதல் என்றால் சரிதான். அதனால் 2017-க்கு பிறகு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்கள் மட்டும் தான் சாரதி போர்டெல்லில் கிடைக்கும் என்றால் சரியல்ல, பழைய ஓட்டுநர் உரிமங்களும் update செய்யப்பட்டுள்ளது. எந்த தேதியிலிருந்து பழைய ஓட்டுநர் உரிமங்கள் update செய்யப்பட்டுள்ளது என்றால் இது வரை வழங்கப்பட்ட அனைத்து ஓட்டுநர் உரிமங்களும்.

விபத்து ஏற்படுத்திய வாகனத்தை பொறுத்து அந்த விபத்து, மனித தவறு காரணமாகவா அல்லது எந்திர தவறு காரணமா என்பதை அறிந்துக் கொள்வதற்கு மோட்டார் ஆய்வாளர் ஆய்வு செய்வது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு ஆய்வு செய்யும் போது ஆர்.சி. புத்தகம், காப்பீட்டுச் சான்று, ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை ஆய்வு செய்து மோட்டார் ஆய்வாளர் அறிக்கையில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

இன்சூரன்ஸ் பாலிசியோ அல்லது ஓட்டுநர் உரிமமோ இல்லை எனும் பட்சத்தில், அதற்கு தனியாக அபராதம் விதிக்கப்படும் என்றால் சரிதான். ஆய்வாளர் அறிக்கையிலும் இன்சூரன்ஸ் பாலிசியோ அல்லது ஓட்டுநர் உரிமத்தையோ சமர்ப்பித்தால் குறிப்பிடப்ட்டும் என்றால் இருக்கும் பட்சத்தில் ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்படுவது வழக்கம்.

ம.சா.ஆ.2 மோட்டார் ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கபடவில்லை என்றால் அவரிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது, அதை எங்களிடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற அர்த்தமா என்றால் ஒரு வாரத்திற்குள்

நீதிமன்றத்திலோ அல்லது காவல் நிலையத்திலோ சமர்ப்பிக்கலாம். ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்காக தனிப்பட்ட முறையில் விஜய் என்பவருக்கு அபராதம் ஏதும் விதிக்கவில்லை என்றால் சரிதான்.

விஜய் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பதால் தான் அவருக்கு தனிப்பட்ட முறையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று அபாரதம் விதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2017க்கு பிறகு தான் கணினி மயமாக்கப்பட்டதால் 2017க்கு முன்னர் உள்ள தகவல்களை என்னால் கூற முடியாது என்றால் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.